

சிங்கப்பூர் உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்தில் வெளியிடப்பட்ட ‘சிங்கப்பூரில் முத்தமிழறிஞர் கலைஞர்’ என்ற நூலை நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் வெளியிட, இந்த ஆண்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கரங்களால் கணியன் பூங்குன்றனார் விருது பெற்ற, சிங்கப்பூர் தமிழறிஞர் முனைவர் சுப.திண்ணப்பன் முதல் நூலைப் பெற்றுக் கொண்டார்.



சிங்கப்பூரில் உமறுப்புலவர் நூல் நிலையத்தில் வெளியிடப்பட்ட ‘சிங்கப்பூரில் முத்தமிழறிஞர் கலைஞர்’ எனும் நூல் வெளியீட்டு விழாவில் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்களிடம், நாவலர் சோமசுந்தர பாரதியாரின் பேத்தியும், டாக்டர் லலிதா காமேஸ்வரன் அவர்கள் மகளுமான, சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகத்தின் இணைப் பேராசிரியர் முனைவர் சித்ரா சங்கரன் இரண்டாம் நூலைப் பெற்றுக் கொண்டார்.

## உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்தில்

# “சிங்கப்பூரில் முத்தமிழறிஞர் கலைஞர்” நூல் வெளியீட்டு விழா!

## கனிமொழி கருணாநிதி எம்.பி. பங்கேற்று சிறப்புரையாற்றினார்!

சிங்கப்பூர், செப் 7 -

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் 1999 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் சிங்கப்பூருக்கு மூன்று நாள் அரசு முறைப் பயணமாகச் சென்றிருந்ததை, “சிங்கப்பூரில் முத்தமிழறிஞர் கலைஞர்” என்ற 330 பக்க வரலாற்று ஆவணத் தொகுப்பு நூலாக்கி இருக்கிறார் செம்மொழி இதழின் ஆசிரியர் இலியாஸ்.

சிங்கப்பூர், உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்தில் 1-செப்டம்பர்-2024 ஞாயிறு மாலை நடைபெற்ற அந்த நூல் வெளியீட்டு விழாவில் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினரும், கழக துணைப் பொதுச் செயலாளருமான கவிஞர் கனிமொழி கருணாநிதி. அவர்கள் கலந்து கொண்டு நூலை வெளியிட்டுச் சிறப்புரையாற்றினார்.

குழுவில் நூலாசிரியருடனும், அயலகத் தமிழர் நல வாரிய உறுப்பினர் டாக்டர் ஜி.வி ராம் அவர்களுடனும் நிகழ்வை ஏற்பாடு செய்யும் பொறுப்பில் இருந்தவரும் கவிமாலை சிங்கப்பூர் அமைப்பின் முன்னாள் தலைவருமான கவிஞர் இறை.மதியழகன் ஏற்பாட்டுக் குழுவின் சார்பாக வரவேற்புரை நிகழ்த்தினார்.

இந்திய மரபுடைமை நிலையத்தின் தலைவர் ஆர்.ராஜாராம் அவர்கள் தலைமையில், 7 நாடுகளில் சிங்கப்பூர் தூதராகப் பணியாற்றிய முன்னாள் தூதர் திரு கேசவபாணி, முனைவர் சுப. திண்ணப்பன், முனைவர் ஜி.வி.ராம். டாக்டர் சேது குமணன், வளர் தமிழ் இயக்கத்தின் தலைவர் திரு நசீர்கனி ஆகியோர் முன்னிலையில் விழா நடைபெற்றது. சான்றோர் பெருமக்களின் முன்னிலையில் இவ்விழா நடை பெற்றது தக்க அங்கீகாரமாக அமைந்து முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுக்கு மேலும் புகழ் சேர்த்தது.




### அண்ணா உரையாற்றிய ஸ்டேடியம்!

விழாவுக்குச் சிறப்பு விருந்தினராக முன்பு பேரறிஞர் அண்ணா உரையாற்றிய ஜாலான் புசார் ஸ்டேடியம் அமைந்திருக்கும் ஜாலான் புசார் குழுத்தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினர் திரு வான் ரிசால் அவர்களும், தேசிய தொழிற்சங்க காங்கிரசின் தலைவரும், நாடாளுமன்ற முன்னாள் நியமன உறுப்பினருமான திருவாட்டி கே.தனலட்சுமி அவர்களும், சிண்டா எனப்படும் சிங்கப்பூர் இந்தியர் மேம்பாட்டுச் சங்கத்தின் தலைவர் இரா.அன்பரசு அவர்களும் வருகை புரிந்து கலைஞர் அவர்கள் நினைவைப் போற்றும் வகையிலும், நூல் வெளியீட்டுக்குப் பெருமை சேர்க்கும் வகையிலும் அமைந்தது.

கலைஞர் அவர்களின் சிங்கைப் பயணத்தின் போது அவரைப் பேட்டி கண்டவரும், அன்றைய தமிழ் முரசின் செய்தியாளருமான சித்ரா துரைசாமி அவர்கள் அனுபவ உரை வழங்கினார்.

சிங்கப்பூர் தேசியப் பல்கலைக் கழகத்தின் மாணவியும் பல்கலைக் கழகத்தின் அரசியல் சங்க உறுப்பினருமான செல்வி விஷ்ணுவர்த்தினி ஆய்வுரை வழங்கினார். அவரது உரை அழகாக, ஆழமாக, அறிவார்ந்த உரையாக அமைந்திருந்தது எதிர்காலத் தமிழ் மீதான நம்பிக்கையைத் தருவதாக பின்னர் கனிமொழி அவர்கள் தனது உரையில் பாராட்டும் வகையில், அவர் பேச்சு சிறப்பாக அமைந்திருந்தது.

தமிழ்முரசு நாளிதழின் ஆசிரியர் த. இராஜசேகர், சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கத்தின் தலைவர் சாமிக்கண்ணு, கவிமாலைக் காப்பாளர் புதுமைத்தேனீ மா.அன்பழகன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

### கனிமொழி கருணாநிதி நூலை வெளியிட்டார்!

நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் நூலை வெளியிட, இந்த ஆண்டு முதல்வர் கரங்களால் கணியன் பூங்குன்றனார் விருது பெற்ற தமிழறிஞர் முனைவர் சுப.திண்ணப்பன் முதல் நூலையும், சிங்கப்பூர் தேசியப் பல்கலைக் கழகத்தின் இணைப் பேராசிரியரும் தமிழறிஞர் சோமசுந்தர பாரதியாரின் பேத்தியுமான முனைவர் சித்திரா சங்கரன் இரண்டாம் நூலையும், தொழிலதிபர் ஜலீல் அவர்கள் சார்பாக அவரது மகன் திரு.சல்மான் அவர்களும், அதைத் தொடர்ந்து தலைமை, முன்னிலை வகித்தவர்களும், சிறப்பு விருந்தினர்களும், உரையாற்றிவர்களும், சிங்கப்பூர் அமைப்புகளின் தலைவர்களும், வணிகர்களும், வந்திருந்த தமிழார்வலர்களும் நூலைப் பெற்றுக் கொண்டனர்.

விழாவில் சிறப்புரை ஆற்றிய தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர், திமுக துணைப்பொதுச் செயலாளர் திருமதி கனிமொழி அவர்கள் “முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், அருகில் இருந்து நான் பார்த்த ஒரு மாபெரும் ஆச்சரியம். அந்த ஆச்சரியத்தின் ஒரு அத்தியாயம்தான் இந்த நூல். ‘உங்கள் குடும்பம் எது ?’ என்று கலைஞர் அவர்கள் கேட்டபோது ‘எங்கெங்கெல்லாம் தமிழர்கள் இருக்கிறார்களோ, தமிழ் பேசும் மக்களுக்கு இருக்கிறார்களோ அவர்கள் அனைவரும் என் குடும்பம்’ என்று சொன்னவர்தான் கலைஞர்.

### ‘ஆனந்த கொண்டாட்டம்’ கலை, பண்பாட்டு நிகழ்வு!

சகோதர சகோதரிகளே என்பதையும் தாண்டி உடன்பிறப்பே என்ற ஒற்றைச் சொல்லால் அனைவரையும் கட்டிப்போடும் தனித்துவமிக்க தலைவர் கலைஞர் அவர்கள். தலைவரது எந்த ஒரு செயலும் அந்தந்த காலத்திற்கு மட்டுமல்ல நீண்ட காலத்துக்கு விதையாக நின்று துளிர்க்கும் ஆற்றல் மிக்கது என்பதற்கான அடையாளம் தான் நேற்று நடந்த ‘ஆனந்த கொண்டாட்டம்’ என்ற கலைப் பண்பாட்டு நிகழ்வும், 25 ஆண்டு காலம் கழித்து அவரது நூற்றாண்டில் ஒரு ஆவண வரலாறான இந்த நூலின் வெளியீட்டு நிகழ்வும்,

கலைஞர் செய்த ஒவ்வொரு காரியமும் எதிர்காலத்திலும் மீண்டும் துளிர்க்கும் உயிர்த்தெழும் என்பதற்கு அடையாளங்கள் தான். இந்த இரு நிகழ்வுகளும்.

இந்த நூலை இயற்றியிருக்கும் “செம்மொழி” காலாண்டிதழின் ஆசிரியர் திரு. இலியாஸ் அவர்களுக்கு ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக, ஓர் உடன்பிறப்பாக, கலைஞர் அவர்களின் மகளாக என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்” என்று தனது உரையில் குறிப்பிட்டார்கள்.

செல்வி இலக்கியா மதியழகன் கிடார் இசைக்கருவியுடன் பாடிய தமிழ்மொழி வாழ்த்துடன் தொடங்கி, நூலாசிரியர் எம். இலியாஸ் அவர்களின் ஏற்புரையுடன் இனிதே நிறைவடைந்த நிகழ்வு முத்தமிழறிஞர் அவர்களின் நூற்றாண்டு நினைவு விழாக்கள் உலகெங்கும் நடந்து வருவதற்கான மற்றுமொரு உதாரணம்.

### கலைஞரின் உரை ஒலி பரப்பானது!

தமிழ் வாழ்த்துக்குப் பின் முத்தமிழறிஞரின் சிங்கப்பூர் வருகையின் போது எடுக்கப்பட்ட புகைப்படத்தின் காணொளியும், சிங்கப்பூர் இண்டோர் ஸ்டேடியத்தில் அவர் அப்போது ஆற்றிய இலக்கியப் பேருரையின் ஒரு பகுதி ஒலிபரப்பான போது அரங்கில் கூடியிருந்த மக்கள் உணர்ச்சி வசப்பட்டதோடு, பலரின் கண்கள் கசிந்ததை பார்வையாளர்கள் பலரும் நிகழ்ச்சியின் இறுதியில் தெரிவித்தனர்.

நூல் விற்பனையில் வசூலான 10,000 சிங்கப்பூர் வெள்ளித் தொகை (சுமார் 6,40,000 ரூபாய்) முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நினைவாக சமூக, அறநிதிக்கு நன்கொடையாக வழங்கப்படும் என்று நூலாசிரியர் இலியாஸ் தெரிவித்தார்.




சென்னை, வண்டலூர், பி.எஸ். அப்துர் ரகுமான் கிரசண்ட் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனக் கூட்டரங்கில், பள்ளிக் கல்வித் துறையின் சார்பில் நேற்று முன்தினம் (05.09.2024) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆசிரியர்களுக்கு டாக்டர் இராதாகிருஷ்ணன் விருதுகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா. மோ. அன்பரசன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர் க. செல்வம், சட்டமன்ற உறுப்பினர் திருமதி வரலட்சுமி மதுசூதனன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, பள்ளிக் கல்வித் துறை அரசுச் செயலாளர் திருமதி சோ.மதுமதி, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் முனைவர் பொ. சங்கர், மாவட்ட ஆட்சித் தலைவர் எஸ். அருண்ராஜ், பள்ளிக்கல்வித் துறை இயக்குநர்கள் கண்ணப்பன், முனைவர் மு.பழனிச்சாமி, நரேஷ் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.




இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (05.09.2024) பாரிஸில் நடைபெறும் பாராலிம்பிக்ஸ் பாட்மிண்டனில் பதக்கம் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த வீராங்கனைகள் துளசிமதி முருகேசன் (வெள்ளி), மணிஷா ராமதாஸ் (வெண்கலம்), நித்ய ஸ்ரீ சிவன் (வெண்கலம்) ஆகிய மூவருக்கும் நினைவு பரிசு, தலா ரூ. 50,000 மதிப்புள்ள பரிசு கூப்பன் வழங்கி வாழ்த்துத் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.